பாடம் 3 ஜனவரி 10-16



# ஜீவனும் மரணமும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** பிலி 1:19–30; 1கொரி 4:14–16; 2கொரி 10:3–6; யோவான் 17:17–19; மீகா 6:8; அப் 14:22.

**மனன வசனம்:** கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். பிலிப்பியர் 1:21.

மரணம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி என்று சிலர் சொல்கிறார்கள். அது ஒரு பொய். மரணம் என்பது வாழ்வுக்கு எதிரானது. அது ஜீவனின் எதிரி. ஒரு கார் உடைந்துபோவதற்காக அதைச் செய்வதில்லை, அதுபோல வாழ்க்கையானது மரணத்திற்காக உண்டாக்கப்படவில்லை. கிறிஸ்துவானவர் 'மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும்' மரித்தாரென பவுல் சொல்கிறார். எபி 2:14,15.

கிறிஸ்துவுக்காக மரிப்பதற்கு பவுல் ஆயத்தமாக இருந்தார். ஆனாலும், என்றாவது ஒருநாள் தான் மரித்தே ஆகவேண்டும் என்பதையும் அறிந்திருந்தார். அதற்கிடையில், தன் வாழ்விலும் சாவிலும் கிறிஸ்துவைக் கனப்படுத்தவும், முடிந்தவரை அநேகருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் தீர்மானித்தார். அவர் அநேக நிருபங்களை எழுதினதற்கு அதுதான் காரணம். தன் எழுத்துகளால் அநேக மக்களையும் இடங்களையும், ஏன் ஒருமுறைகூட சென்றிராத இடங்களையும் அணுகமுடிந்தது.

வாழ்க்கை குறுகியது; தேவன் நமக்குத் தந்துள்ள வாழ்நாட்களுக்குள் தேவனுடைய ராஜ்யத்திற்காக மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவேண்டியது முக்கியம். அதில் ஒன்றுதான், 'விசுவாசத்தில் ஒருமைப்பட்டவர்களாக' மாறுவதாகும். பிலிப்பிய விசுவாசிகளுக்கு பவுல் நிருபம் எழுதினதற்கு இது ஒரு முக்கியக் காரணம் என்பதை இந்த வாரம் பார்ப்போம்.

*2026, ஜனவரி 17 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# கிறிஸ்து மகிமைப்படுவார்

**தன் விசாரணையின் முடிவு எப்படி இருக்க வேண்டுமென்று பவுல் எதிர்பார்த்தார்? பிலி 1:19,20. தன் விடுதலையைவிட எதை அதிக முக்கியமாகக் கருதுகிறார்?**

பவுல் ஒரு குற்றவாளி இல்லாவிட்டாலும், அவர் சிறையில் அடைக்கப்படுவது இது முதல் முறையல்ல. உபத்திரவமும் அவருக்கு புதிதல்ல. அன்றுவரை தான் பட்ட பாடுகளை கொந்தியருக்கு விளக்கமாக எழுதுகிறார்: 'அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்.' 2கொரி 11:23-27.

இந்த உபத்திரவங்கள்தாம் எப்போதும் பவுலின் சிந்தையில் இருந்ததாக நாம் எண்ணிவிடாதபடிக்கு, 'இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது' என்று அடுத்த வசனத்திலேயே கூறுகிறார். 2கொரி 11:28.

**தான் ஸ்தாபித்த திருச்சபைகளோடும், கிறிஸ்துவுக்காக ஆயத்தப்படுத்தின மக்களோடும் பவுல் எப்படிப்பட்ட உறவை வைத்திருந்தார்? 1கொரி 4:14-16; 1தெச 2:10-12; கலா 4:19; பிலேமோன் 10.**

கிறிஸ்து நம்மை இரட்சிப்பதற்காக, செய்யவேண்டிய எல்லாவற்றையும் செய்தார்; அதுபோல பவுல் சகவிசுவாசிகளின் நன்மைக்காக 'செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும்' ஆயத்தமாக இருந்தார். 2கொரி 12:15. முரண் என்னவென்றால், ஒருவரது செயல்பாடுகள் எவ்வளவு தூரம் இயேசுவைப்போல உள்ளதோ, அவ்வளவுக்கு அவர் குறைவாக மற்றவர்களால் அன்புகூரப்படுவார்; பாராட்டும் கிடைக்காது. 'கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.' 2தீமோ 3:12. ஆனாலும், அவர்கள்தாம் தேவனை மகிமைப்படுத்தவும், சுவிசேஷத்தின் சத்தியத்தை வெளிப்படுத்தவும்கூடிய வல்லமையான வழியாக உள்ளனர். பிலி 1:7. பவுல் அநியாயமாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது, பவுலிடம் காணப்பட்ட பொறுமையும் மகிழ்ச்சியும் தைரியமும் விசுவாசமும் எப்போதும் பிரசங்கித்துக் கொண்டிருந்தன.

---

**நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள்? உங்களை நன்றாக நடத்தாதவர்களை எப்படி நடத்துகிறீர்கள்? இயேசுவுக்காக எப்படிப்பட்ட சாட்சியாக விளங்குகிறீர்கள்?**

# சாவு எனக்கு ஆதாயம்

நோம் கவனிக்கிறோமோ இல்லையோ, நாம் எல்லாருமே மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம்; அது நம்மைச் சுற்றிலும், நமக்குள்ளும் நடைபெற்று வருகிறது. நாம் எல்லாரும் ஏதோ ஒருவிதத்தில் இந்தப் பிரபஞ்சப் போராட்டத்தின் நிஜத்தை அனுபவிக்கிறோம். நாம் மரிக்கிற நாள்மட்டும் அதை அனுபவித்தாக வேண்டும்.

**நாம் ஈடுபட்டுள்ள ஆவிக்குரிய போராட்டத்தின் அடிப்படை என்ன? நமக்குள்ள ஆயுதங்கள் யாவை? 2கொரி 10:3-6.**

---

நல்லவையோ, கெட்டவையோ எண்ணங்கள்தாம் மிகபலத்த ஆயுதங்கள். விமர்சனம், நம்பிக்கைத் துரோகம், மனஉளைச்சல், பயம், சகாக்களின் அழுத்தம் போன்றவை கிறிஸ்தவர்கள் பயன்படுத்தக்கூடாதவை. இவற்றைச் சாத்தான் பயன்படுத்துகிறான். நாமோ அன்பு, இரக்கம், சமாதானம், சாந்தம், நீடிய பொறுமை, தயவு, சுயக்கட்டுப்பாடு ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும். ஆவியானவர் கையாளுகிற தேவ வசனம்தான் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம். எபே 6:17. ஏனென்றால், தேவன்மட்டுமே ஒருவரது மனதில் சத்தியத்தை உணர்த்தமுடியும். தேவன் தம் நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்துகிற கருவிகளாகமட்டுமே நாம் இருக்கிறோம்.

**மாபெரும் போராட்டத்தின் பின்னணியில் பிலி 1:21,22 இல் பவுல் சொல்கிற கருத்து என்ன?**

---

இந்த யுத்தம் ஆவிக்குரியது என்பதால், அது யோசனைகளும் விழுமியங்களும் சம்பந்தப்பட்ட யுத்தம். ஆனாலும், சிலுவையில் கிறிஸ்து நமக்காக அதை வென்றிருக்கிறார்; அவருடன் நாம் தொடர்பில் இருக்கிற வரையிலும், நாம் கொல்லப்பட்டாலும்கூட நாம் தோற்கடிக்கப்படுவதில்லை. இந்தப் பூமியில் தனக்கு நேர்ந்த எல்லாவற்றிலும், அவை அநியாயமானவையாக இருந்தாலும், தேவனுக்கு பவுல் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்; ஏனென்றால், பரலோக நீதிமன்றத்தில் அவர் தன் வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் ஒப்படைத்திருந்தார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம் உரிமைகளுக்காகப் போராடுவதைவிட நீதியானவற்றிற்காக அதிகமாகப் போராடவேண்டும். 'வலியவன் சொல்வதே சரியானது' என்பது சரி இல்லை; 'சரியானதைச் செய்வதே வலிமை' என்பதுதான் சரி. தேவசித்தத்திற்கு அர்ப்பணிப்பது மதிப்பானது; நாம் ஈடுபட்டுள்ள போரில் வெற்றிபெறுவதற்கு அதுமட்டுமே ஒரே வழி. தேவ சித்தத்திற்கு அர்ப்பணிப்பதைப் புரிந்துகொள்ள மிகச்சிறந்த எடுத்துக்காட்டு இயேசுவே. அதை பிலி 2இல் பவுல் வலியுறுத்துகிறார்.

---

**தற்சமயம் எந்தெந்த வழிகளில் மாபெரும் போராட்டத்தை அனுபவிக்கிறீர்கள்? கிறிஸ்து நமக்காக ஏற்கனவே வெற்றிபெற்றதை அறிவதன்மூலம், எவ்வாறு ஆறுதலும் பெலமும் பெறலாம்?**

# நிச்சயத்தோடு இருத்தல்

**‘விட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருப்பது அதிக நன்மை’ என்று பவுல் சொல்வதின் அர்த்தம் என்ன? பிலி 1:23,24.**

இந்த வேதப்பகுதியை எல்லாக் காலங்களிலுமே மக்கள் தவறாகத்தான் புரிந்திருக்கிறார்கள். வாழ்வதற்கும் சாவதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை இந்த வாரத்திற்கான ஆராய்ச்சி வசனங்களில் பவுல் காட்டுகிறார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்காக வாழ்கிறார்கள்; மரிக்கவும் செய்யலாம். அது ‘ஆதாயம்’. ஏனென்றால் நம்முடைய சாட்சி அந்த அளவுக்கு அதிக ஆற்றல்மிக்கது; தூண்டி இழுக்கக்கூடியது. பிலி 1:21. ஒரு நம்பிக்கைக்காக ஒருவர் மரிக்கவும் ஆயத்தமாக இருந்தால், அதை அவர் உண்மையில் நம்புகிறார் என்று அர்த்தம்.

ஆனால் மரித்தவர்கள் மரித்தவர்கள்தாம். அவர்கள் ‘ஒன்றும் அறியார்கள்’. உயிர்த்தெழுதல் வரைக்கும் கல்லறையில் ஓய்வெடுக்கிறார்கள். பிர 9:5; யோவான் 5:28,29. அதனால்தான் மரித்துப்போன லாசருவைப்பற்றி, ‘நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்; நான் அவனை எழுப்பப்போகிறேன்’ என்று இயேசு சொன்னார். யோவான் 11:11.

மரிக்கிறவர்கள் உடனடியாக பரலோகத்திற்குச் சென்றால், லாசருக்கு எப்படி இருந்திருக்கும்! நான்கு நாட்கள் பரதீசில் இன்பமாகக் கழித்தபின்பு ஒரு தூதன் ‘மோசமான’ செய்தியுடன் வருகிறான். அதாவது, ‘லாசருவே வருந்துகிறேன். இயேசு உன்னை மீண்டும் பூமிக்கு அழைக்கிறார். இங்கு நீ இருக்கமுடியாது’’ என்று சொன்னால், எப்படி இருக்கும்?

இதைப் பகுத்தறியத் தவறினால், அது எவ்வளவு பெரிய தவறாகிவிடும்! கனவே வராத ஒரு நித்திரை போன்றது மரணம். அதிலிருந்து இயேசு தம் உண்மை ஊழியர்களை இரண்டாம் வருகையின்போது எழுப்புவார்; பிறகு உயிரோடிருக்கிற பரிசுத்தவான்களோடு சேர்ந்து அவர்கள் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பரலோகத்தில் என்றென்றும் இயேசுவோடு இருப்பார்கள். 1தெச 4:16,17.

‘மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருக்கும்படிக்கு’, கிறிஸ்துவோடுகூட பாடுகளையும் மரணத்தையும் அனுபவிப்பதையே தற்போதைய வாழ்க்கையை விட்டு ‘பிரிந்து’ செல்வதென்று பவுல் குறிப்பிடுகிறார். பிலி 3:11. மேலும், மரணத்தின்போது பவுல் தன் கண்களை மூடியபிறகு, அடுத்த கணம் இயேசுதாம் அவர் கண்களுக்குத் தெரிவார்; தேவன் ஆயத்தம்பண்ணின இடத்திற்கு, உயிர்த்தெழுதலில் சகல தேவமக்களோடும்கூட பவுலையும் தேவன் கொண்டுசெல்வார் என்பதை சந்தேகமின்றி பவுல் அறிந்திருந்தார். கிறிஸ்துவுக்காக மரிப்பதற்கு பவுல் ஆயத்தமாக இருந்தாலும், தான் ‘சரீரத்தில் தரித்திருப்பது’ பிலிப்பியர்களுக்கு பிரயோஜனமாக இருக்குமென்று அறிந்திருந்தார். பிலி 1:24. கிறிஸ்துவுக்காக வாழ்வது நல்லதா, மரிப்பது நல்லதா என்பதற்குப் பதிலளிப்பது கிறிஸ்தவருக்கு எளிதல்ல. உயிரோடு இருப்பதா, கல்லறையில் ஓய்வெடுப்பதா என்கிற ‘இவ்விரண்டினாலும்’ பவுல் ‘நெருக்கப்பட்டார்’. பிலி 1:23.

---

**யாருமே மரிக்க விரும்புவதில்லை என்றாலும்கூட, ஒருவர் மரித்து, கண்விழிக்கும்போது அவர் அறிவது கிறிஸ்துவின் வருகையாகத்தான் இருக்கும் என்பதை எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? பவுல் இங்கு யோசிப்பதைப் புரிந்துகொள்ள, அந்தக் கருத்து எவ்வாறு உதவுகிறது?**

# ஒரே ஆவியிலே உறுதியாய்

இயேசு தம் சீடர்களுக்காக ஏறெடுத்த கடைசி ஜெபத்தில் ஒரு கருத்து முக்கியமாக உள்ளது; அது ஒற்றுமை. சிலுவைக்கு அப்பால் பிதாவோடும் நம்மோடும் மீண்டும் தாம் ஐக்கியமாவதுதான் கிறிஸ்துவின் கண்களில் தெரிந்தது. 'பிதாவே, நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்.' யோவான் 17:24. தேவ பிள்ளைகள் 'நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு' அவர்களைக் காத்துக்கொள்ளுமாறு பிதாவினிடத்தில் வேண்டினார். யோவான் 17:11. ஒற்றுமை இல்லாத நிலையின் மோசமான விளைவுகளையும் வலியுறுத்தினார். அதாவது, அநேகர் விசுவாசியாமல் இருப்பதற்கு, அது காரணமாகிறது. அந்தச் சுருக்கமான ஜெபத்தில் இரண்டு முறை, நாம் அவரோடும் பிதாவோடும் ஒன்றாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார். அதற்குக் காரணம், 'உலகம் விசுவாசிக்கிறதற்காக', 'என்னை நீர் அனுப்பினதை உலகம் அறியும்படிக்கு' என்கிறார்.

**திருச்சபையில் ஒற்றுமை காணப்படுவதற்கு இயேசு சொல்வதும் பவுல் சொல்வதும் ஏன் இன்றியமையாதவை? பிலி 1:27; யோவான் 17:17-19.**

'பாத்திரராகமாத்திரம் நடந்துகொள்ளுங்கள்' என்று பிலி 1:27 இல் வருகிற சொற்றொடருக்கு, 'குடிமக்களாக நடந்துகொள்ளுங்கள்' என்று அர்த்தம். அதாவது பூமிக்குரியவர்களாக அல்ல, பரலோகக் குடிமக்களாக என்று அர்த்தம். பரலோகப் பிதாவின் பிள்ளைகளாக இருப்பதின் அர்த்தம்பற்றி ஓர் அருமையான காட்சியை மலைப்பிரசங்கம் காட்டுகிறது: ஆவியில் எளிமை, சாந்தகுணம், நீதியின்மீது பசிதாகம், இரக்கம், இருதயத்தில் சுத்தம், சமாதானம்பண்ணுதல், மறு கன்னத்தையும் காட்டுதல், சத்துருக்களைச் சிநேகித்தல், சபிக்கிறவர்களை ஆசீர்வதித்தல், நம்மை வெறுக்கிறவர்களுக்கு நன்மைசெய்தல் போன்றவை. சுருக்கமாக, 'நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதாகும்.' மீகா 6:8.

அப்படிப்பட்டவர்கள்மீது எரிச்சலோ, கோபமோ எளிதில் வராது; வருமா? சிலசமயங்களில் மிகவும் நல்லவர்களாக இருப்பவர்களைப் பார்த்தால், நமக்கு கோபம் வருகிறது. அவர்களைக் காலிபண்ண நினைக்கிறோம். நம்மைப்பற்றி நாம் நன்றாக உணர்வதற்காக, அவர்களிடம் ஏதாவது பெலவீனப்பகுதியைக் கண்டுபிடிக்கவும் தூண்டப்படுகிறோம். மாறாக, நாம் எவ்வாறு அதிக அன்பும் தயாளமும் இரக்கமும் தாழ்மையும் உள்ளவர்களாக மாறலாம் என்று ஏன் யோசிக்கக்கூடாது? தேவனை அல்லது சத்தியத்தை நேசிப்பதைவிட, உலகத்தையும் அதன் ஆதாயத்தையும் அதிகம் நேசிக்கிற பலர் இருப்பதாக எலன் ஒய்ட் சொல்கிறார்.

பெரும்பாலும் பெருமையால்தான் சபையில் பிரிவினை காணப்படுகிறது. பெருமையும் உலக இலட்சியமும் பேணிவளர்க்கப்படுவதால், கிறிஸ்துவின் ஆவி விலகிச்செல்கிறது. திருச்சபையின் கவனத்தைக் குலைத்து, பெலவீனமாக்குகிற போலித்தனமும் கருத்துவேறுபாடும் சச்சரவும் வருகின்றன. இயேசு முன்மாதிரியாக வைத்துப்போன தாழ்மையையும் சாந்தக்குணத்தையும் கற்றுக்கொள்வது எவ்வளவு முக்கியம்! அப்படியிருந்தால் எவ்வளவு வித்தியாசமான திருச்சபையாக இருப்போம், இல்லையா?

# ஒற்றுமையாயும் மருளாமலும்

**நாம் ஒற்றுமையாக இருப்பதும், சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடுவதும் எவ்வாறு நாம் மருளாமல் இருக்க உதவுகின்றன? பிலி 1:27-30.**

---

மக்களைப் பிரித்துவிட்டு, அவர்களை வெற்றி காண்பதே சாத்தானின் வியூகம். ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே. மாற்கு 3:25. இந்தச் சாதாரண நியதியை நாம் மறக்கும்போது, சாத்தான் பேரானந்தம் அடைகிறான். வேதாகமத் தீர்க்கதரிசனம் வலியுறுத்துகிற ஊழியத்தை, மீதமான சபையின் ஊழியத்தை, நாம் நிறைவேற்ற நாம் ஒற்றுமையாக இருப்பது அவசியம். வெளி 12:17. அதாவது, 'சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் நித்திய சுவிசேஷத்தை அறிவிப்பதே' நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வேலை. வெளி 14:6. அதை நிறைவேற்ற ஒற்றுமை அவசியம். ஒற்றுமைக்கான மிகமிக முக்கிய வழி தேவ வார்த்தையின் 'சத்தியம்'; அதை யோவான் 17 இலுள்ள இயேசுவின் ஜெபம் காட்டுகிறது. யோவான் 17:17,19. நாம் அறிவிக்கிற செய்திக்கும், நமது ஊழியத்துக்கும், நம் ஒற்றுமைக்கும் வித்தியாசம் இருப்பதாக எண்ணவேகூடாது. நின்றாலும் விழுந்தாலும் மூன்றும் சேர்ந்தே இருக்கும். இந்த மூன்றில் ஒன்று இல்லாவிட்டாலும், நாம் வெற்றிபெறமுடியாது. மூன்றும் இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால், நாம் பயப்பட ஒன்றுமே இல்லை. எதிர்ப்பால் 'மருள' வேண்டிய அவசியமில்லை. பிலி 1:28. சாத்தான் தோற்கடிக்கப்பட்ட ஓர் எதிரி. நம் விசுவாசத்திற்காக நாம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டாலும், நாம் 'நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால்' நமக்கு எதுவும் தீங்கு விளைவிக்க முடியாது. 1பேதுரு 3:13. தேவ சத்தியம் தொடர்ந்து செல்வதைத் தடுப்பதற்கு சாத்தானுக்கு வல்லமை இருக்காது.

**பின்வரும் வசனங்களை வாசித்து, அவை சொல்கிற பொதுக் கருத்தைச் சுருக்கமாக எழுதுங்கள்: மத் 10:38; அப் 14:22; ரோமர் 8:17; 2 தீமோ 3:12.**

---

நம்மில் 'சிறந்தவர்களுக்குக்'கூட, இந்த உலகத்தில் வாழ்க்கை மிகக்கடினமாகத்தான் இருக்கிறது. யோபு ஒரு நீதிமான்; அவர் 'உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்' என்று வேதாகமமே சொல்கிறது. யோபு 1:1. ஆனாலும் ஒரே இரவுக்குள்ளாக அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் பேரழிவு நேரிட்டது. இந்த உலகத்தின் வாழ்க்கையே மலைவிளிம்பில் நிற்பது போன்றது; எப்போது வேண்டுமானாலும் கீழே விழலாம் என்கிற அனுபவத்தை அனுபவிக்காதவர் அல்லது பார்க்காதவர் யாராவது இருக்கமுடியுமா? நம் எல்லாருக்குமே கொஞ்சமாகவோ கூடுதலாகவோ உபத்திரவம் உண்டாகிறது. முடிவில், கிறிஸ்துவின் நிமித்தம் பாடுபடுவதுதான் அனைத்திலும் சிறந்தது.

---

**நம் உபத்திரவங்களுக்குமத்தியில் நமக்குள்ள நம்பிக்கையும் ஆறுதலும் என்ன?**

---

# மேலும் படிக்க:

'எரிகம்பம், கழுமரம், நிலவறை, பூமியின் குகைகள், கெபிகள் ஆகியவற்றிலிருந்து இரத்தச்சாட்சிகள் இட்ட வெற்றி முழக்கம் இரட்சகர் காதில் விழுகிறது. உறுதிமிக்க ஆத்துமாக்களின் சாட்சியை அவர் கேட்கிறார்; அவர்கள் சித்திரவதை அனுபவித்த நிலையில் இருந்தாலும், நான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்று அறிவேன் என்று தங்கள் விசுவாசம் குறித்து பயமற்ற, பரிசுத்தமான சாட்சியளிக்கிறார்கள். விசுவாசத்திற்காக உயிரிழந்த இந்த ஆத்துமாக்கள், தாங்கள் நம்பிக்கை வைத்தவர் முற்றிலுமாக தங்களை இரட்சிக்க வல்லவர் என்று உலகிற்கு அறிவிக்கிறார்கள்.'[1]

'இன்று காணப்படுவதுபோன்ற பல்வகை விசுவாசங்கள் கிறிஸ்தவ உலகில் இதற்கு முன்பு காணப்பட்டதில்லை. ஆதிகாலத் திருச்சபையின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கு அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள் போதகர்கள் போன்ற ஈவுகள் அவசியமாக இருந்திருக்குமானால், இப்போது ஒற்றுமையை மீண்டும் நிலைநாட்ட எவ்வளவு அதிகமாக தேவை! எபே. 4:11–13. கடைசி நாட்களில் திருச்சபையின் ஒற்றுமையை மீட்டெடுப்பதே தேவனுடைய நோக்கம் என்பது தீர்க்கதரிசனங்களிலிருந்து மிகத்தெளிவாகத் தெரிகிறது. கர்த்தர் சீயோனைத் திரும்பிவரப்பண்ணுவாரென்று ஜாமக்காரர்கள் காண்பார்கள் என்று நிச்சயமளிக்கப்பட்டுள்ளது. மேலும், கடைசிக்காலத்தில் ஞானவான்கள் இதை உணர்ந்துகொள்வார்கள். இது நிறைவேறும்போது, ஞானிகளாக தேவன் கருதுகிற அனைவர்மத்தியிலும் விசுவாச ஒற்றுமை காணப்படும்; ஏனென்றால், இந்த நிஜநிலையை சரியாகப் புரிந்துகொள்வார்கள். இதுபோன்ற பரிசீலனைகளிலிருந்து, திருச்சபை பூரண நிலையை அடைவதுபற்றி இங்கு முன்னுரைக்கப்படுவது எதிர்காலத்தில் இனி நடக்கவிருப்பது தெளிவாகிறது; எனவே இந்த ஈவுகள் இன்னும் அவற்றின் நோக்கத்தை நிறைவேற்றவில்லை.'

[1] Ellen G. White, The Acts of the Apostles, p. 512.

---

## கலந்துரையாடக் கேள்விகள்

1 *தேவனுடைய திருச்சபையில் பரிசுத்த ஆவியானவர் இன்று ஒற்றுமையைக் கொண்டுவருவதற்கு எது அவசியம்? தீர்க்கதரிசன வரத்தின்மூலம் வந்துள்ள ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவது திருச்சபை ஒற்றுமைக்கு எவ்வளவு முக்கியமானது?*

2 *மரித்த பவுலும் பிற கிறிஸ்தவர்களும் இப்போது பரலோகத்தில் 'கிறிஸ்துவுடன்' இருப்பதாக நம்புகிற ஒரு நண்பருக்கு மரணம்குறித்த வேதாகமத்தின் போதனையை எவ்வாறு விளக்குவீர்கள்?*

3 *இந்த உலகத்தில் காணப்படும் பாடுகளின் நிஜநிலையை எவ்வாறு புரிந்துகொள்கிறீர்கள்? அதைப் புரிந்துகொள்வதற்கு மாபெரும் போராட்டக் கருத்து எவ்வாறு அதிகம் உதவுகிறது? சிலுவையில் தொங்கிய இயேசுவே பிதாவுடைய அன்பின் முழுமையான வெளிப்பாடு. நாம் அந்த அன்பை நோக்கிப் பார்ப்பதும், மிகவும் மோசமான நேரங்களிலும் அவரை நம்பக் கற்றுக்கொள்வதும் ஏன் முக்கியமானது?*

# காப்பாற்ற வந்த மயில்கள்!

நல்ல பாம்பு குஞ்சிகள் பொறிக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டார் பியூலா ஃபெர்னான்டஸ். இவர், பெங்களூருவில் உள்ள ஒரு செவந்த்–டே அட்வென்டிஸ்ட் வளாகத்தில் இயங்குகிற சன்சைன் சிறுவர்கள் இல்லம் மற்றும் பள்ளியின் இயக்குனர். ஐந்து வருடங்களுக்குமுன் மாந்தோட்டத்தில் ஒரு கன்றுக்குட்டியை விரட்டிச்சென்றபோது, ஒரு சிறுவனை நல்ல பாம்பு கொத்திவிட்டது. அவனை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டுசென்றும்கூட, பல அறுவைசிகிச்சைகள், ஒருவருடம் சிக்கலான சிகிச்சைகள் செய்துதான் காப்பாற்றமுடிந்தது.

இப்போது அந்த வளாகத்தின் சாலைகள், தோட்டம், கார், ஏன் பியூலாவினுடைய வீட்டின் வெளிப்புறம் என எல்லா இடங்களிலும் பாம்புக்குஞ்சிகள் உலாவின. ‘ஆண்டவரே! இது பிள்ளைகளுக்கு பாதுகாப்பாக இருக்கவேண்டிய இடம். தயவுசெய்து காப்பாற்றும்!’ என்று ஜெபித்தார்.

பாம்பு பிடிக்கிறவர்களை அழைத்தார்கள்; ஆனால் அவர்கள் நகரத்தின் கட்டிடங்களிலும், திறந்தவெளி அல்லாத இடங்களிலும் பாம்புகள் பிடித்துதான் வழக்கம். ஆனாலும் மாமரங்களும் வாழை, பலா, சப்போட்டா, பப்பாளி, சீத்தா, அவகோடா, தேங்காய், கொய்யாய், அத்தி, தாட்பூட், முள்சீதா போன்ற மரங்களும் நிறைந்த அந்த வளாகத்தில் நல்ல பாம்பு குட்டிகளைக் கண்டுபிடிப்பது கடினமான பணியாக இருந்தது. வளாகப்பணியாளர்களும் மாணவர்களும் ஊக்கமாக ஜெபித்தார்கள்.

பிறகு அந்த வளாகத்தில் ஒரு மயில் வந்திருப்பதை ஒரு பணியாளர் பார்த்தார். அது சாத்தியமா? ஒரு பெரிய நகரத்தின் மத்தியில் இருக்கிற ஒரு வளாகத்திற்கு மயில் வர முடியுமா?

மயில்கள் விஷமுள்ள பாம்புகளை தின்னக்கூடியவை. கொஞ்ச நேரத்திற்கு பிறகு, மற்றொரு பணியாளர் இரண்டாவதாக ஒரு மயிலைப் பார்த்தார்.

ஒரு சில நாட்கள் கழித்து, தோகை விரித்தாடிய ஒரு ஆண்மயிலும் அதனோடு ஒரு பெண்மயிலும் அந்த வளாகத்தைச் சுற்றிவருவருவதை பணியாட்களும் பிள்ளைகளும் கண்டார்கள். பளபளப்பான நீல நிற மயிலானது, தன் நீண்ட, கண்–வடிவ அடையாளங்கள் உள்ள தன் தோகைகளை விரித்தாடி யதை எல்லாருமே ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

அன்றுசாயங்காலநேரத்திற்குபிறகு, நல்லபாம்புகுஞ்சுகளையேபார்க்கமுடியவில்லை.

பாம்புகள் மறைந்தாலும்கூட, பிள்ளைகளுக்கும்பணியாட்களுக்கும்காவலர்கள்போல அந்த மயில்கள் வளாகத்திலேயே இருந்தன.

இன்று தினமும் மயில்களைப் பார்க்கமுடிகிறது, பிள்ளைகளும் ஓடிச்சென்று அந்த மயில்களை சந்தோஷமாகப் பார்க்கிறார்கள்.

தங்கள் ஊக்கமான ஜெபத்திற்குக் கிடைத்த பதில்தான் அந்த மயில்கள் என்று பியூலா நம்புகிறார். அந்தப் பள்ளி மற்றும் சிறுவர் இல்லத்தின் 45 வருட வரலாற்றில், இதற்குமுன் அந்த வளாகத்தில் மயில்கள் காணப்பட்டதே இல்லை.

“தேவனே அந்த மயில்களை அனுப்பியதாக நம்புகிறேன். தேவன் தம் பிள்ளைகளை நேசிக்கிறார், அக்கறைகாட்டுகிறார்; நம்முடைய எல்லா இக்கட்டுகளுக்கும் அருமையான தீர்வுகளைக் கொடுக்கிறார்” என்று சொன்னார்.